# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

<u>ஆணை எண் 54/மா/2025</u>
<u>நாள் 23.03.2026</u>

ஏ. செல்வராஜ்
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 4,
பெருநகர சென்னை மாநகராட்சி. --- எதிர் மனுதாரர்

சென்னை, கொருக்குபேட்டை, கோவிந்தசாமி நகர், வ.உ.சி. தெரு, கதவு எண் 32/33 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஏ.செல்வராஜ் என்பவரின் 18.12.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.12.2024 அன்று பெறப்பட்டு 54/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

சென்னை, கொருக்குபேட்டை, கோவிந்தசாமி நகர், வ.உ.சி. தெரு, கதவு எண் 32/33 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஏ. செல்வராஜ் என்பவர் 18.12.2024 நாளிட்ட தனது மனுவில் இணைத்துள்ள மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆர். கே. நகர் தொகுதி கொருக்குப்பேட்டை துவங்கப்படும் போது கொருக்குப்பேட்டை இளைய முதலிய தெரு திருநாவுக்கரசு தோட்டத்திற்கும், மக்கள் குடும்பத்துடன் வாழ குடியேறும் போது அன்றைய ஆட்சியில் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களின் அரசு ஆணை உத்தரவின்படி பொது மக்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக பொது மக்கள் அவசர தேவைக்கு 8 பெட்டிகள் கொண்ட 1 கழிப்பறை என்ற விகிதத்திலும், 10 குடும்பத்தை சார்ந்தவர்களுக்கு ஒரு கழிப்பறை என்ற அளவில் திருமதி பா. வளர்மதி அவர்கள் அமைச்சராக இருந்த போது அவர்கள் மூலமாக வழங்கப்பட்டு இருந்தது. அந்த கழிப்பறைகளை நாளடைவில் சில அரசியல்வாதிகள் அதிகாரத்தைக் கொண்டு இடித்து விற்பனை செய்து விட்டனர்.

இது குறித்து ஆர்.கே.நகர் சட்டமன்ற தேர்தலின் போது மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களை சந்தித்து நேரடியாக எனது புகார் மனுவை அளித்திருந்தேன்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் உயிருடன் இருந்த போது அரசியல்வாதிகள் பொது கழிப்பிடங்களை ஆக்கிரமிப்பு செய்வது சற்று தணிந்தது. அவர்கள் இறந்த பிறகு சில அரசியல் புள்ளிகள் மீண்டும் பொது மக்கள் கழிப்பறை (ம) கழிவுநீர் தொட்டிகளை ஆக்கிரமிப்பு செய்து இடித்து வந்தனர். இது சம்பந்தமாக பொது கழிப்பிடத்தை இடிப்போர் மீது எச்.6 மற்றும் எச்.4 காவல் நிலைய நிலையங்களில் அருகில் இருந்த கக்கூசை காணவில்லை என்று புகார் அளித்து இருந்தேன்.

மேலும் பொது கழிப்பிடங்களை காணவில்லை எனவே கொருக்குப் பேட்டை வரைபடத்தில் உள்ள பொதுமக்கள் கழிப்பறையை கண்டுபிடித்து தருமாறு பல தடைவ புகார் மனு அளித்திருந்தேன். அது தொடர்பான செய்தி பல தின பத்திரிக்கைகளிலும், தொலைக்காட்சி மூலமாகவும் வந்துள்ளது.

தி.மு.க. ஆட்சியிலும், அதிமுக ஆட்சியிலும் தொடர்ந்து புகார் கொடுத்தும் எந்த ஒரு நடவடிக்கையும் இல்லை. தற்போது மாண்புமிகு ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக ஆன போது கூட கழிப்பிடம் இடிக்கப்பட்டது. இது சம்பந்தமாக அவரிடமும் புகார் அளிக்கப்பட்டது. ஆதாரத்துடன் சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி அவர்களிடமும் புகார் கொடுக்கப்பட்டது. ஆனாலும் நடவடிக்கை இல்லை.

தற்போது உள்ள சென்னை மேயர் பிரியா அவர்களை நேரடியாக சந்தித்து புகார் கொடுத்து இந்த விஷயத்தைப் பற்றி எடுத்துக் கூறினோம், ஆனாலும் நடவடிக்கை இல்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அலுவலகத்திலும் முறையாக புகார் அளிக்கப்பட்டது. ஆனாலும் புகார் மீது நடவடிக்கை இல்லை. சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ல் பலதடவை புகார் கொடுத்தும் புகார் மீது எந்த நடவடிக்கையும் இல்லை.

ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை திறக்க வந்த மாண்புமிகு சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடமும் நேரடியாக புகார் அளிக்கப்பட்டது. ஆனாலும் நடவடிக்கை இல்லை. அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஆட்சியிலும் தற்போது எதிர் கட்சியாக இருக்கும் மாண்புமிகு எடப்பாடி பழனிச்சாமி, ஓ. பன்னீர் செல்வம், வடசென்னை மாவட்ட செயலாளர் ஆர்.எஸ். ராஜேஷ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஐ.ஏ.எஸ். சண்முகம் அவர்களிடமும், ஆர்.கே.நகர் தொகுதி வ.உ.சி நகரில் அமைந்துள்ள குடிசை மாற்று வாரிய துணை ஆணையர் அவர்களிடமும் எச்.6 காவல்துறை ஆய்வாளர்கள், எம்.கே.பி.நகரில் அமைந்துள்ள கழிவுநீர் அகற்று வாரியத்திலும், சென்னை மாநகராட்சி 41–வது வார்டு அலுவலகத்திலும், தற்போது உள்ள மாமன்ற உறுப்பினரிடம் முறையாக புகார் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. இதற்கு முன் சட்டமன்ற உறுப்பினராக இருந்த டி.டி.வி. தினகரன் அவர்களிடமும் முறையாக புகார் அளிக்கப்பட்டது. ஆனால் நடவடிக்கை இல்லை.

எனவே, ஆக்கிரமிப்பு செய்தவர்கள் மற்றும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காத அரசு அதிகாரிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கக் கோரியும் ஆக்கிரமிப்பு செய்த இடத்தை அரசுடமை ஆக்கவும் மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 28.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. 08.10.2025 நாளிட்ட நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டும், அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 13.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் 13.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''சென்னை–600 021, ஆர்.கே.நகர் தொகுதி, கொருக்குப்பேட்டை பகுதியில் அரசு ஆணை உத்தரவின்படி பொது மக்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக பொது மக்கள் அவசர தேவைக்கு 8 பெட்டிகள் கொண்ட 1 கழிப்பறை என்ற விகிதத்திலும், 10 குடும்பத்தை சார்ந்தவர்களுக்கு ஒரு கழிப்பறை என்ற அளவில் கட்டப்பட்டது. அந்த கழிப்பறைகளை நாளடைவில் சில அரசியல் வாதிகள் அதிகாரத்தைக் கொண்டு இடித்து விற்பனை செய்து விட்டனர்.

குறிப்பாக சென்னை கொருக்குப்பேட்டையில் உள்ள இளைய முதலி தெரு மற்றும் ஜெ.ஜெ. நகர் ஆகிய இடங்களில் கட்டப்பட்ட கழிவறை இடிக்கப்பட்டு, அங்கு குப்பை கூளங்களும், கட்டிட கழிவுகளும் போடப்பட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.

எனவே, கொருக்குப்பேட்டையில் ஆக்கிரமிப்பு செய்த பொது கழிவறைகளை மீட்கவும், ஆக்கிரமிப்பினை அகற்றாத பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

5. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் இளநிலை பொறியாளர் 13.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் தெரிவித்த கொருக்குப்பேட்டை, இளைய தெருவில் உள்ள கழிவறை சிதலம் அடைந்து விட்டதால் பொது மக்கள் குப்பைகளை கொட்டியிருந்தார்கள். குப்பைகள் அகற்றப்பட்டு, முள்வேலி அமைத்து தற்போது மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளது.

மேலும், மேற்கண்ட இடத்தில் Design Build Finance of Toilet என்ற திட்டத்தின் கீழ் கழிவறை கட்ட கருத்துரு பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அனுமதி பெறப்பட்ட பின் கழிவறை கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தினை முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

6. மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

சென்னை–600 021, ஆர்.கே.நகர் தொகுதி, கொருக்குப்பேட்டை பகுதியில் அரசு ஆணை உத்தரவின்படி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக பொது மக்களின் அவசர தேவைக்கு 8 பெட்டிகள் கொண்ட 1 கழிப்பறை என்ற விகிதத்திலும், 10 குடும்பத்தை சார்ந்தவர்களுக்கு ஒரு கழிப்பறை என்ற அளவில் கட்டப்பட்ட கழிப்பறைகளை நாளடைவில் சிலரால் இடித்து விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதும், குறிப்பாக கொருக்குப்பேட்டையில் உள்ள இளைய முதலி தெரு மற்றும் ஜெ.ஜெ. நகர் ஆகிய இடங்களில் கட்டப்பட்ட கழிவறை இடிக்கப்பட்டு, அங்கு குப்பை கூளங்களும், கட்டிட கழிவுகளும் போடப்பட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதும், அவ்வாக்கிரமிப்பினை அகற்றி மேற்கண்ட பொது கழிவறைகளை மீட்கவும், மேற்கண்ட ஆக்கிரமிப்பினை அகற்றாத பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் தெரிவித்த கொருக்குப்பேட்டை, இளைய தெருவில் உள்ள கழிவறை சிதலம் அடைந்து விட்டதால் பொது மக்களால் கொட்டப்பட்ட குப்பைகள் அகற்றப்பட்டு, முள்வேலி அமைத்து தற்போது மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதும், மேற்கண்ட இடத்தில் Design Build Finance of Toilet என்ற திட்டத்தின் கீழ் கழிவறை கட்ட கருத்துரு பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், அனுமதி பெறப்பட்ட பின் கழிவறை கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரணைக்கு ஆஜரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் தெரிவித்த கொருக்குப்பேட்டை, இளைய தெருவில் உள்ள சிதலம் அடைந்த கழிவறைகளை Design Build Finance of Toilet என்ற திட்டத்தின் கீழ் கழிவறை கட்ட பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கருத்துருவின் மீது அனுமதி பெறப்பட்ட பின் கழிவறை கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் இளநிலை பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, உரிய நடவடிக்கையினை துரிதமாக மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

மேலும் மனுதாரரின் மனுவின் நகல் இம்முறைமன்ற நடுவ 28.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ற்கு அனுப்பப்பட்டு 15 நாட்களுக்குள் அறிக்கை அளிக்குமாறு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ (முறையீடுகள், தாக்கல், விசாரித்தல் மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதி, 2015, விதி 9–ன்படி கோரியும், மேலும் இம்முறைமன்ற நடுவ 08.10.2025 நாளிட்ட நினைவூட்டு கடிதத்தில் 15 தினங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும், தவறும்பட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு, துறைரீதியான நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்படும் என்று தெரிவித்து இருந்த போதிலும், இம்முறைமன்ற விசாரணை நாள் வரை அறிக்கை அனுப்பாமல், மெத்தனமாக செயல்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. ஏ. செல்வராஜ் (எ) R.T.I. செல்வம்,
நெ. 32/33 வ.உ.சி. தெரு, கோவிந்தசாமி நகர்,
கொருக்குப்பேட்டை, சென்னை–600 021.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003

(3) மண்டல அலுவலர், மண்டலம் 4,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண்266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை 600 021.

(4) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

25/3/26
செயலாளர்.

25/3/26 210

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032